**செய்தி வெளியீடு எண்: 37** **நாள்: 14–01–2012.**

# சுற்றுலாத்துறை
## கிராமிய பொங்கல் விழா

பொங்கல் விழா தமிழ் கலாசாரத்தின் சிறப்புகளையும் பண்பாட்டின் மேன்மையும் பறைசாற்றும் வகையில் கலை நிகழ்ச்சிகளுடன் தமிழகம் எங்கும் மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள், உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.

தமிழக சுற்றுலா வளர்ச்சிக்கு இவ்வரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. இந்திய அளவில் தமிழ்நாடு அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இரண்டாம் இடத்தையும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

தமிழக சுற்றுலாத்துறையின் சார்பாக அனைத்து சுற்றுலா அலுவலகங்களுக்கும் பொங்கல் சுற்றுலா விழாவினை சிறப்பாக கொண்டாட நிதி அனுமதிக்கப்பட்டு பொங்கல் விழாவினை, கிராமிய பொங்கல் விழாவாக கொண்டாடப்பட உள்ளது. அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களின் ஆணைக்கேற்ப நகரத்திலோ, கிராமத்திலோ சிறப்பாக தமிழர் திருநாளை பொங்கல் சுற்றுலா விழாவாக சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பொங்கல் சுற்றுலா விழாவின் போது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு பொங்கல் செய்து காண்பித்தல், பலவகையான விளையாட்டு போட்டிகள், கோலப்போட்டிகள், மாட்டு வண்டி பயணம், கிராம மக்களின் வாழ்க்கை மற்றும் கிராமிய கலைநிகழ்ச்சிகள் போன்றவைகளை கண்டு மகிழ சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் பொங்கல் சுற்றுலா விழாவின் போது ஜல்லிகட்டு, ரேக்லாரேஸ் நிகழ்ச்சிகளில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் பிரத்தியேகமாக செய்யப்படுகிறது. அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிகட்டு

நிகழ்ச்சியினை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் காண்பதற்கு ஏதுவாக சிறப்பு பேருந்துகள் இலவசமாக சுற்றுலாத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இவ்வாண்டு, தமிழக கட்டிட கலைகளின் தாயகமான மாமல்லபுரத்தில் அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையால், பொங்கல் சுற்றுலா விழா மாமல்லபுரம் அருகில் உள்ள கடம்பாடி கிராமத்தில் **16–01–2012** அன்று பிற்பகல் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாட்டுவண்டி பயணம், பொங்கல் செய்தல், கிராமிய கலை நிகழ்ச்சிகள் போன்ற ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது.

மேலும், தலைநகர் புதுதில்லியிலும் பொங்கல் சுற்றுலா விழாவினை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இல்லத்தில் நடைபெறும் பொங்கல் விழாவின் போது சுற்றுலாத்துறையின் மூலம் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு தமிழக சுற்றுலாத்துறை பின்வரும் இடங்களில் பொங்கல் சுற்றுலா விழாவினை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | புது தில்லி | **16.1.2012** அன்று தமிழ்நாடு இல்லத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 2 | மாமல்லபுரம் | **16.1.2012** அன்று கடம்பாடி கிராமத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் பல்வேறு கிராமிய கலைநிகழ்ச்சிகளும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 3 | கொடைக்கானல் | **15.1.2012** அன்று வில்லுபட்டி கிராமத்தில் கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 4 | திருநெல்வேலி | **15.1.2012** அன்று பாளையங்கோட்டை, வ.உ.சி. |

| | | |
|---|---|---|
| | | மைதானத்தில் கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 5 | பூம்புகார் | 16.1.2012 அன்று நாமரினா ஒட்டல், தரங்கம்பாடியில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பொங்கல் செயல்முறை விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 17.1.2012 அன்று பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் பொங்கல் சுற்றுலா விழா கிராமிய கலை நிகழ்சிகளுடன் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 6 | தஞ்சாவூர் | 15.1.2012 அன்று தில்லைஸ்தானம் கிராமத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகள், கபடி போட்டி மற்றும் கோலப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 7 | சிதம்பரம் | 14–1–2012 அன்று வாலிகண்டபுரம் கிராமத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 8 | மதுரை | 16.1.2012 அன்று திருமால்புரம் கிராமத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பொங்கல் செயல்முறை விளக்கம் கிராமிய கலை நிகழ்சிகளுடன் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 17.1.2012 அன்று அலங்கநல்லூரில் நடைபெறும் ஜல்லிகட்டு நிகழ்ச்சியினை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் காண்பதற்கு ஏதுவாக சிறப்பு பேருந்துகள் சுற்றுலாத்துறை மூலம் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 9 | திருவண்ணாமலை | 14.1.2012 அன்று கலசபாக்கம் கிராமத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 10 | திருச்சி | 17.1.2012 அன்று ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட பழூர் கிராமத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளுக்கு தமிழக பண்பாட்டு கலாச்சார முறைப்படி வரவேற்பு, மாட்டுவண்டி பயணம், கிராமத்தினை சுற்றி பார்த்தல், கோலங்களை கண்டு ரசித்தல், புராதன கோயிலை கண்டுகளித்தல் மற்றும் பொங்கல் வைத்தல் ஆகிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 11 | உதகமண்டலம் | 21.1.2012 அன்று உதகை படகு இல்லத்தில் கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 12 | சேலம் | 17.1.2012 அன்று ஏற்காடு படகு இல்லத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 13 | தருமபுரி | 21.1.2012 அன்று ஒகேனக்கல்லில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 14 | இராமேஸ்வரம் | 17.1.2012 அன்று இராமேஸ்வரம் விவேகானந்தா பள்ளியில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 15 | காரைக்குடி | 17.1.2012 அன்று திருப்பத்தூர் கிராமத்தில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 16 | வேலூார் | 17.1.2012 அன்று வேலூார் கோட்டை பெரியார் பூங்காவில் கிராமிய கலைநிகழ்ச்சி, கோலப்போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 17 | கன்னியாகுமரி | 15.1.2012 அன்று அகத்தீஸ்வரம் கிராமம் முத்தாரம்மன் கோயில் வாளகத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் 251 பானைகளில் பொங்கல் வைத்து கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |
| 18 | கோயம்புத்தூர் | 17.1.2012 அன்று கோயம்புத்தூர், நாதாகவுண்டன்புதுாரில் கலைநிகழ்ச்சிகளுடன் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |

இதுபோன்ற நமது பாரம்பரிய விழாக்கள் பன்நாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையினை அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்கள் மீண்டும் மீண்டும் தமிழகத்திற்கு வருகை புரிய ஊக்குவிக்கிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**